உ

கடவுள் துணை.

கள்ளுகடைசிந்துஎன்னும்

குடியர் சிந்து



சென்னை-ப்ரசை

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1901.

உ

கடவுள் துணை.

கள்ளுக்கடை சிந்து.

விருத்தம்.

நம்பினுன்யிருந்தகள்ளே நாடியையறிந்த கள்ளே
தம்பியும்தகப்பன்பாட்டன் தலம்பறைகண்ட கள்ளோ
வம்புநீசெய்தாய்கள்ளே வருவையோசொல்வாய்கள்ளோ
சொம்புபோல்குடுவைகள்ளே சோறுபோல்கொதிக்கும்
தங்கம்போலானகள்ளே தயிரியங்கொடுக்கும் கள்ளே
எங்களைவளர்க்குங்கள்ளேஎங்கேபோயொளித்தாய் கள்
சிங்கம்போலெகுருங்கள்ளே ஜெயிலுக்கு அனுப்பும் கள்
பொங்கியேவழியுங்கள்ளோ புரப்பட்டுவருவாய்கள்ளே.

ஆனந்தக்களிப்பு.

ஜாடியேஉனக்கொருகும்பிடு — அந்த
சாராயங்குடித்தாக்கால் பேதியெடுக்குது
புட்டியேஉனக்கொருகும்பிடு — அந்த
பீரைகுடித்தாக்கா சோரைக்கெடுக்குது

கள்ளேஉனக்கொருகும்பிடு—அந்த
கஞ்சாவடித்தாக்கா நெஞ்சைவுலத்துது
மரமேஉனக்கொருகும்பிடு—அந்த
மதத்தையிழுத்தால் பலத்தைக்கெடுக்குது
எப்போவருவாயோகள்ளே—உனக்கு
இதுஞாயமல்லாநீ எழுந்துவாகள்ளே

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி,

வந்துதேகள்ளு—யீஸ்பரன்போலே
வந்துதேகள்ளு

அநுபல்லவி.

வந்துதேபார்கள்ளு வாகனங்கரிவாடு
நொந்துயிருந்தபேரை நெட்டித்தள்ளிக்கொண்டு (வந்)

சரணங்கள்.

ஆதிவேலேகளெல்லாம் அடுமாண்டுபோச்சுது
அஞ்சணு ஆரணு படியொன்று ஆச்சுது
சோதியதன்சுருக்கு சூரியனுக்குமேது
சுள்ளேக்கடித்துக்கொண்டு உள்ளுக்குக்கள்விட்டால்
யெழும்புதேதோபோதை—தலேக்குமேல்கைதுக்கி
கடிக்குதேபல்லே.
ஆரணுபோனுலும் ஆட்டின்மயிரேபோச்சு
அதுகுடிக்கும்போதை காட்டுப்புலியும்சீச்சீ

பாரில்பட்டையும்பத்தாய் குழந்தைகுடிக்கும்பாய்ச்சி
பாட்டாக்கள்ஒருமூச்சி பாணைக்தடுத்துப்போச்சி (வந்)

ரகுபதிகடைக்கள்ளு ராவெல்லாங்கொடையுது
ரவுண்டுடாணுக்கள்ளு கிருக்குகள்வாங்குது
பரைச்சேரிகடைக்கள்ளு பாடுது ஆடுது
டாமூஞ்சுடுக்காட்டுகள்ளு தலைகீழாய்துள்ளுது
இதுவென்னகள்ளு—பலவைதொட்டிக் கள்ளு
ஒழுவுதேசொள்ளு.
பெண்சாதியெதிர்த்தாக்கால் பளிச்சென்றுமாட்டுது
பிள்ளைநயினுவென்றால் சொள்ளையிலடிக்குது
தன்பேச்சிபோல்வந்தால் தட்டிக்கொடுக்குது
தடுத்துச்சொன்னால்பல்லை கடித்துமுடுக்குது
யெடுக்குதேகிருக்கு நாலுபேர்பிடித்தாலும்
யிழுக்குதேமொரப்பு (வந்)

செஞ்சி ஏகாம்பரமுதலியாராலியற்றிய

குடியர் அலங்காரம்.

வெண்பா.

காலைக்குடியரெல்லாம் கவைக்குதவார் கள்குடிப்பார்
வேலைக்குப்போகார் வெறியனைப்போலலைவார்
வெறுமைவந்தபோது வேலைக்குப்போவார்
தருமமோகுடியர்க்குத் தான்.

புருஷன்சொல் சிந்து.

முக்கிமுக்கிகஷ்டப்பட்டு கேளடி பெண்ணே
மூணுபணங்கொண்டுவந்தேன் பாரடி கண்ணே
பக்குவமாய்செலவுநீ பண்ணடி பெண்ணே
பாட்டாக்கள்ளுக்கொருபணந் தாக்கடி கண்ணே

பெண் சொல்லல்.

கள்ளைமறந்திடடா குடிகார பாவி
காலையில்குடியாதடா சதிகார பாவி
பிள்ளைகுட்டிபெத்தாயோடா சண்டாள பாவி
யின்னம்புத்திவல்லையோடா குடிகார பாவி
(புரு)சேனைநாள்பழக்கமடி முட்டாளு பெண்ணே
ஜென்மத்திலேவூரிபோச்சே கெட்டண்டி கண்ணே
நானுமட்டுங்குடித்தனென்று எண்ணாதே பெண்ணே
நாலுமூணுதலம்பரையாய் நடக்குது கண்ணே
(பெ)குடிக்கேனென்றுசத்தியங்கள் பண்ணையே பாவி
குடல்பழுத்துதென்றுகதை சொன்னையே பாவி
ஜாடிகள்ளுஉன்குலைக்கிப் போதாதே பாவி
சாப்பிட்டாலும்வீண்சட்டைகள் செய்யாதே பாவி
(புரு)மனவருத்தப்படுவதாலே கேளடி பெண்ணே
மாஜினமாகிலும்இன்னு வாரண்டி கண்ணே
துணதுணென்றுபேசாதடி முட்டாளு பெண்ணே
தூட்டுகூடகுரைஞ்சிபோச்சி தூக்குது கண்ணே

(பெ)பணம்போனாலும்போகுதையா எந்தன் கணவா
பங்கிவுண்டைபழக்கம்வேண்டாம் எந்தன் கணவா
குணத்தின்படிநடப்பேனையா எந்தன் கணவா
கும்மாமுட்டுங்குடுக்கவேண்டாம் எந்தன் கணவா
(புரு)கும்மாவுன்னைகுடுப்பதில்லை கேளடி பெண்ணே
குடிக்கிமட்டும்ஒத்தைபணம் தாக்கடி கண்ணே
சும்மாசும்மா சொன்னனென்று எண்ணாதேபெண்ணே
சோத்துப்பானெயெகரிப்பூடுங் தவரினால் கண்ணே
(பெ)சோத்துபானேஎகரிப்போனல் கேளடா பாவிஉன்
சூத்துதாண்டாகாஞ்சிபோகுங் குடிகார பாவி
நேத்துசொன்னசத்தியத்தை மறந்தாயே பாவி
நெஞ்சிமட்டும்நெட்டிவிட்டு வந்தாயே பாவி
(புரு)குடியருக்குசத்தியங்களேதடி பெண்ணே
கூச்சலிங்கேபோடவேண்டாம் கேளடி கண்ணே
புட்டியடித்தும்போதைகொஞ்சம் காணண்டி பெண்ணே
பணமிருந்தால்பட்டைகுடித்து வருவண்டி கண்ணே
(பெ)பட்டைமூஞ்சில்பிடிவிழுக குடிகார பாவி
பாட்டாவுடன்பட்டைசேர்ந்தால் மோசண்டா பாவி
கஷ்டபட்டுபணத்தைவீணாய் யழிக்காதே பாவி
காலங்கருப்பானதினால் சொன்னேண்டா பாவி
(புரு)பணம்போனாலும்ஷட்டம்போச்சி கேளடி பெண்ணே
பாட்டாயடித்தால்கையுங்காலு முரைக்குதுபெண்ணே

கணக்குபார்த்துகுடிக்காவிட்டால்கேளடி பெண்ணே
காலணாகூடகையில்கிட்டாது பெண்ணே
(பெ)பஞ்சைபோலேகற்றகல்வி படிக்காதே பாவி
பாரிலுள்ளோரெல்லாம்வுன்போல் குடித்தாரோ பாவி
செஞ்சி-யேகாம்பரங்கவியை கேளடா பாவி
சிரிக்குதுஉலகமெல்லாங் குடிகார பாவி.

தெலுங்கும்-தமிழும்,

ஒகலேல காபடினபாடு
ஊரந்தஅடிகிரூடு ஜாடியே கள்ளுஜாடியே
பிருபுட்டிசெய்தமோசம்
பிப்பாதண்ணியை கேட்டுபாருஜாடியே கள்ளுஜாடியே
போசேடப்புடுகுசுருக்கண்டாதி
போயினவதலா ஏமிலேது புட்டியே கள்ளுபுட்டியே
பட்டை. தண்ணியை நம்பிநம்பி
சொட்டுமூத்திரங்கூடகாணோம் புட்டியே கள்ளுபுட்டி.
கள்ளுவொச்சினமாடவினி
காலிவாளுடயப்படிந்தி காவடி கள்ளுகாவடி
இத்தனைநாள் பட்டபாடு
யாரைகேட்டால் தெரியபோவுது குடுவையே கள்குடு
சிறுமணவூர்முனிசாமி
செப்பிசெப்பிநவ்விண்டு மொந்தையே கள்ளுமொந்தை

ஆனந்தக்களிப்பு.

பரிபூரணானந்தபோதம்—னேற்று
பகலெல்லாமழைபெய்து சுவரெல்லாம்வோதம்
சாராயபுட்டியைநம்பு—அதை
சாப்பிட்டால்கொடுக்குதே அளவற்றதெம்பு
கையிக்கி செலவில்லை கொம்பு—யாரை
கண்டதேகுத்தினால் கயளுதேகெம்பு (தரு)
பெற்றதாய்சொல்லைக் கேளாதே—உந்தன்
பெண்டாட்டி பிள்ளைக்கி கஞ்சிவார்க்காதே
உற்றாரை ஊரில்சேர்க்காதே—உந்தன்
ஆயுசுக்குமொருகாசு தருமஞ்செய்யாதே (தரு)
பெற்றதாயாரைத் தடிகொண்டுமோட்டு—பெற்ற
தகப்பனையும் பாட்டனையும் வீட்டைவிட்டோட்டு
உற்றாரைஉறவாரைமாட்டு—இந்த
ஊரிலுள்ளோர்மேல் கச்சையுங்கட்டு
தருமஞ்செய்யாதிருமனமே—நாளை
கருமத்தைசெய்தாலே கடைத்தேறலாமே (தரு)

கள்ளுகடைசிந்து
முற்றிற்று.